DR. H. V. HANDE: Sir, even in the City of Madras after yesterday's statement, more people have become homeless. It is feared that rains would continue for two, three days more. Today is Saturday and tomorrow is a holiday. May I request the Chief Minister to request the Corporation Commissioner and the Police Commissioner to survey the flood-affected areas, like Perambur, South and North Madras and arrange for relief measures immediately. Also, they may decide immediately the anticipated relief measures for tomorrow and the day after.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: நான் நேற்றே கூறியதைப் போல நிவாரணப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மறு படியும் நேற்றையதினம் பெய்தமழையில் பாதிக்கப்பட்டிருப்பவர் களுக்கும் போலீஸ் அதிகாரிகளேயும், மாநகராட்சி மன்ற மேயரையும் நிவாரணம் அளிக்க கேட்டுக் கொண்டிருக்கிருேம். அவர்கள் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்வார்கள். தற்காப்பு நடவடிக்கைகளாக எவற்றை மேற்கொள்ளவேண்டுமோ அவற்றையும் எடுத்துக் கொண்டு வருகிருேம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஊட்டியில் தாய் தந்தையை இழந்து அனுதையாக ஆகிவிட்ட குழந்தையை வளர்ப்பதற்கும், அதன் எதிர்கால படிப்புக்கும் அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: அந்தக் குழந்தையின் தாயாக இந்த அரசு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்கிற காரணத்தினுல் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

3. நடைமுறைக் கேள்வி:

பேரவையின் தீர்ப்புக்கு மாருக, பேரவை உறுப்பினர் ஒருவர் பத்திரிகையாளரிடம் கூறியதான செய்தி குறித்து.

திரு. எல். கணேசன்: பேரவைத் தலைவர் அவர்களே, 2ம் தேதி அன்று இந்தப் பேரவையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி பல்வேறு பிரச்சனைகள் கிளப்பப்பட்டு தாங்களும் விரிவானதொரு தீர்ப்பை அளித்துவிட்டீர்கள். பெரும்பான்மையான உறுப்பினர்களின் நம்பிக் கையை முன்னுள் பேரவைத் தலைவர் திரு. மதியழகன் இழந்து விட்டார், அவரைப் பதவியில் இருந்து நீக்கம் செய்தது சட்டப்படி சரியானதுதான் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படி இருக்க இந்த மன்றத்தின் பொறுப்புமிக்க உறுப்பினர் ஒருவர், ஒரு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடியவர், பத்திரிகை நிருபர்கள் தாங்கள் எப்போது அவைக்குச் செல்வீர்கள் என்று கேட்ட

தற்கு "உண்மையான சபாநாயகர் வந்தால் போவேன்" என்று சொல்வது, சபைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்கிற தங்களை அவமதிப்பதுபோல, இந்த அவையையே அவமதிப்பதுபோல ஆகாதா? இதற்குத் தங்களுடைய தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிருபர்களிடத்தில் அவர் அவ்வாறு சொல்லியிருக்கிருர். அது பத்திரிகையில் வந்த விஷயம். சபையில் வந்து பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாத காரணத்தினால் ஏதோ சாக்குபோக்காக நிருபர்களுக்குச் சொல்லிய செய்தியாகத்தான் நாம் அதைக் கொள்ள வேண்டுமே தவிர அதுபற்றிய ஆராய்ச்சியில் நாம் இறங்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பத்திரிகையில் வெளி வந்த செய்தியை வைத்து இங்கே பாயின்ட் ஆர்டர் என்று அதனை எழுப்புவது சரியல்ல. வேண்டுமென்றால் வேறு உரிமைப்பிரச்சினை யாகக் கொண்டுவரலாம்.

4. அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் (தொடர்ச்சி).

* திரு. கே. பி. கோபால் : துணைத்தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் சமயநல்லூர் மின் நிலையத்தைப்பற்றி குறிப்பிட்டதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. தேய்மானச் செலவை கருத்தில் கொண்டுதான் அது விற்பனை செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கியபோது அந்த முறை கையாளப் பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

நான் போடி சம்பவத்தைப்பற்றிச் சொன்னேன். சொக்கநாதபுரத்தில் அரசாங்க பஸ் ஒன்று தீக்கொளுத்தப்பட்டது. எங்கு நடந்தாலும் இதுபோன்ற வன்முறைச் சம்பவத்தைக் கண்டிக்கிறோம். இதில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் புலன் விசாரணை செய்து அவர்களை அரசாங்கம் தண்டிக்க வேண்டும். ஆனால் சொக்கநாதபுரம் கிராமம், அதை அடுத்துச் சுற்றுப்புற இடங்கள் ஆகியவற்றில் வசிக்கும் எல்லா ஜனங்களும் போலீசாரால் கண்மூடித்தனமாகத் தாக்கப் பட்டிருக்கிருர்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

அதுபோல மதுரை நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டேன். காலேஜ் ஹவுசில் இருந்து சோடாப் புட்டியை வீசியிருக்கிருர்கள். அதைத் கண்டிக்காது மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிருர்கள். ரயில்வே நிலையம் வரை துரத்தி மாணவர்களை மட்டுமல்ல, தொழிலாளர்களைத் தாக்கியிருக்கிருர்கள். இதுபோன்ற காரியங்கள் எல்லாம் அரசாங்கத்தினால் மாணவர்களை பழிவாங்கும் நோக்கத்துடன்தான் செய்யப்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.